# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 144/18 — 1975 ජනවාරි 03 වැනි සිකුරාදා — 1975.01.03

144/18 ஆம் இலக்கம் — 1975 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ—பீ 21/61* 14

**1961 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க வியாபாரிகளுக்கு உரிமம் வழங்கற் சட்டம்**

1961 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க வியாபாரிகளுக்கு உரிமம் வழங்கற் சட்டத்தின் 3 ம், 4 ம் பிரிவுகளின் கீழ் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. பி. இலங்காரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1974 ஆம் ஆண்டின் வியாபாரிகளுக்கு உரிமம் வழங்கல் (இல. 2) ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பெற்றோல் வழங்கும் நிலையம் ஒன்றிற்குப் பொறுப்பாயிருக்கும் ஆள் ஒவ்வொருவரும் தமது தள மானி சரியாக இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காக நிறுவைகள், அளவைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் முத்திரையிடப்பட்ட ஓர் இம்பீரியல் கலன் அளவையை அத்தகைய பெற்றோல் வழங்கும் நிலையத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

3. கலன் அளவில் பெற்றோல் வாங்குதற்கு விரும்பும் வாங்குநர் எவரும், அவர் வாங்கவிருக்கும் பெற்றோல் அவரது வாகனத்தின் பெற்றோல் தாங்கிக்குள் ஊற்றப்படுதற்குமுன், மேற்கூறிய முத்திரையிடப்பட்ட இம்பீரியல் கலன் அளவைக்குள் முதலில் பாய்ச்சப்படல் வேண்டுமென வேண்டலாம்.

4. மூன்றும் ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக, மேற்சொல்லப்பட்டவாறாக, முத்திரையிடப்பட்ட இம்பீரியல் கலன் அளவைக்குள் தளமானியின் பொறிமுகத்தில் குறிக்கப்பட்டவாறான ஒரு கலன் பெற்றோல் பாய்ச்சப்பட்டுள்ளதுடன், அத்தகைய அளவையினுள்ள பெற்றோலின் மட்டம் இம்பீரியல் கலனொன்றைக் குறிக்கும் குறிமட்டத்திற்குக் குறைவானதாயிருக்குமிடத்து, பெற்றோல் வழங்கும் நிலையத்திற்குப் பொறுப்பாயிருக்கும் ஆள் பெற்றோலின் மட்டத்தை இம்பீரியல் கலனொன்றைக் குறிக்கும் குறிமட்டத்திற்குக் கொண்டுவருதற்கென, சொல்லப்பட்ட அளவைக்குள் போதிய அளவு பெற்றோலை மேலும் ஊற்றுதல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில்—

"தளமானி" என்பது, ஒரு சேமிப்புத்தாங்கியிலிருந்து ஓர் அளவினதான நீர்மத்தை ஒரு கொள்கலனுள் வழங்கும்போது அதனை அளப்பதான ஓர் அளவிடும் கருவி என்று பொருளாகும்;

"பெற்றோல்" என்பது பெற்றோலிய மோட்டார் ஸ்பிறிற் என்று பொருளாகும் என்பதுடன் டீசல் எண்ணெயையும் உள்ளடக்கும்.

1-409/1

ச. வ. பி. 89/50 (II)

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. பி. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 தேதி.

### ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் 1974 ஆம் ஆண்டின் விலைக்கட்டளைகளை வெளியிடுதல் ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. விலைக்கட்டுப்பாட்டாளர், சட்டத்தின் 4(4) (ஆ) என்னும் பிரிவின் கீழான எந்த ஒரு கட்டளையையும் கசெற்றில் வெளியிடுவதுடன், அத்தகைய கட்டளையின் சுருக்கத்தைச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான தினப்பத்திரிகைகளில் ஒன்றிலும் வெளியிடலாம்.

3. இவ் ஒழுங்குவிதிகளில்——

"சட்டம்" என்பது (173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் எனப் பொருளாகும்.

"கட்டுப்பாட்டாளர்" என்பது சட்டத்திலுள்ள அதே பொருளையுடையது.

1-409/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.